மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

முன்னிலை : - **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், நீடாமங்கலம்

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி (முழு கூடுதல் பொறுப்பு)

2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆம் நாள் வியாழக்கிழமை

திருவள்ளுவராண்டு 2055 ஸ்ரீ சோபகிருது வருடம் பங்குனித்திங்கள் 15 ஆம் நாள்

**இடைநிலை மனு எண். 346/2022-ல்**

**அசல் வழக்கு எண். 07/2018**

ஞானசம்பந்தம் ...மனுதாரர்/பிரதிவாதி

**// எதிர்//**

ஜெயபால் ....எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. சம்பத்குமார் அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு. S. விஜயன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது தாவா சொத்து தொடர்பாக அசல் வழக்கின் மனுதாரர்/பிரதிவாதியால், எதிர்மனுதாரர்/வாதி பெயரில் சமூகம் நிதிமன்றத்தில்

தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகின்ற இவ்வழக்கின் மூல அ.வ.எண்.22/2017-ல் விசாரணை நிலையை எட்டும் வரையில் இவ்வழக்கின் மேல் நடவடிக்கைகளை நிறுத்திவைத்து உத்தரவு பிறப்பிக்கக்கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 10 மற்றும் 151 -ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம் :-**

மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி. அசல் வழக்கானது வாதியால் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, வாதியை முதல் விசாரணை செய்யப்பட்டு, குறுக்கு விசாரணை செய்வதற்காக வாய்தா போடப்பட்டுள்ளது. தாவா தாவா சொத்தைப் பொறுத்து மனுதாரரால் வாதி பெயரில் அ.வ.எண். 22/2017 தாக்கல் செய்யப்பட்டு வழக்கானது நிலுவையில் இருந்து வருகிறது. அசல் வழக்கில் இடைக்கால உறுத்துக்கட்டளை மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் பல்வகை மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. மேற்கண்ட இரு வழக்குகளின் சொத்து விபரமும், தரப்பினர்களும், வழக்குமூலமும், ஒன்றோடொன்று தொடர்புடையது என்பதாலும், இரண்டு வழக்குகளிலும் ஒரே சமயத்தில் தீர்வு ஏற்படவேண்டியதாக இருப்பதாலும், அசல் வழக்கையும், அசல் வழக்கு எண். 22/2017 யும் ஒன்றாக சேர்த்து விசாரணை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இந்நிலையில், இவ்வழக்கின் வாதி முன்னதாக முதல் விசாரணை தொடங்கப்பட்டுள்ளது. மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் வழக்கு, மேல்முறையீடு நடவடிக்கைகளில் முரண்பட்ட தீர்வு எட்டப்படக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் வழக்கு எண். 22/2017 விசாரணை நிலையை எட்டும் வரையில் இந்த வழக்கின் மேல் நடவடிக்கையை நிறுத்திவைக்கக் கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபணையின் சுருக்கம்:-**

அசல் வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் எதிர்மனுதாரர்/வாதி முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய போடப்பட்டுள்ள வழக்கின் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்கக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் எதிர்மனுதாரர்/வாதியை குறுக்கு விசாரணை செய்து வழக்கு நடவடிக்கைகள் நடைபெற்றால் மேற்படி வாதிக்கு சாதகமாக தீர்ப்பாகிவிடும் என்ற அச்சத்திலும், வாதிக்கு எவ்வித நீதியின் பலனும் கிடைத்துவிடக்கூடாது என்ற கெட்ட நோக்கத்திலும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வாக்கு எண்.22/2017-ல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விபரமும், வழக்கு மூலங்களும் பொய்யானதும்,

தவறானதும் ஆகும்.

அசல் வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்திற்கும், மனுதாரருக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை. மனுதாரர் வழக்கு சொத்தைப் பொறுத்து 3 ம் நபர் ஆவார். வழக்குசொத்தை அபகரிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் அசல் வழக்கு எண்.22/2017 ஐ தாக்கல் செய்து எதிர்மனுதாரருக்கு மன உளைச்சல் ஆளாக்கி வருவதோடு அசல் வழக்கு எண்.7/2018 ம் நடத்தாமல் நிறுத்தி வைத்து எதிர்மனுதாரர்/வாதிக்கு பெரும் கஷ்டத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற கெட்ட நோக்கத்தில் வழக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 23.11.2021 ம் தேதியன்று முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்காக கடந்த 07.12.2021 வாய்தா போடப்பட்டுள்ளது. கடந்த 7.12.2021 தேதியிலிருந்து நாளது தேதி வரை குறுக்கு விசாரணை செய்யாமல் காலம் தாழ்த்தி வருவதோடு தற்போது மேற்படி அசல் வழக்கை நிறுத்தி வைக்க மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆகவே, இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**4.** இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், ஆட்சேபணை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

**5. இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை ஆகும்.**

**தீர்வு :-**

மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு, நிரூபண வழக்குமூலங்கள், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**2.** மனுதாரர் தனது மனுவில் அசல் வழக்கு எண்.22/2017 என்ற வழக்கு இந்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருவதாகவும்,அந்த வழக்கில் இடைக்கால உறுத்துக்கட்டளை மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் மாண்புமிகு மன்னார்குடி சார்புநீதிமன்றத்தில் பல்வகை மேல்முறையீடு மனுதாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருவதாலும் இந்த வழக்கிலும் அசல் வழக்கு எண்.22/2017 என்ற வழக்கிலும் சொத்து விபரமும், தரப்பினர்களும், வழக்கு மூலமும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையது என்பதால் இரண்டு வழக்கையும் ஒன்றாக நடத்தி தீர்வுக்காண வேண்டும் என்று கூறியுள்ளார். மேலும், அசல் வழக்கு எண்.22/2017 விசாரணை நிலையை எட்டும் வரையிலும், இந்த வழக்கின் மேல் நடவடிக்கைகளை நிறுத்திவைக்க கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

**3.** இந்த அசல் வழக்கில் வழக்கு மூலமானது 13.12.2017-ல் பிரதிவாதிகள் தாவா சொத்தை ஆக்கிரமிக்க முயற்சி செய்ததாக சொல்லப்பட்டுள்ளது. அசல்

வழக்கு எண்.22/2017-ல் 24.03.2017 ம் தேதி பிரதிவாதிகள் தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிக்க முயற்சி செய்ததாக சொல்லப்பட்டுள்ளது. இரண்டு வழக்கிலும் வழக்கு மூலங்கள் மாறுபட்டு காணப்படுகிறது.

மேலும், அசல் வழக்கு எண். 22/2017 ல் இடை நிலை மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் மேல்முறையீடு மனு நிலுவையிலிருந்து வரும் நிலையில், மாண்புமிகு மன்னார்குடி சார்புநீதிமன்றத்தில் இவ்வழக்கை நிறுத்தி வைக்க மனு தாக்கல் செய்து உத்தரவை பெற்றுக்கொள்வதற்கு வழிவகை உள்ள நிலையில் இந்தநீதிமன்றத்தில் அசல் வழக்கின் மேல் நடவடிக்கையை நிறுத்தி வைக்க மனு தாக்கல் செய்திருப்பது ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இல்லை. எனவே, இம்மனுவினை தள்ளுபடி செய்து உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்தாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவில்,** இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று ( 28.03.2024) அவையறியப் பகரப்பட்டது.

(S/d.A.Seethalakshmi)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி. (மு.கூ.பொ)

**<u>குறியிடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u>**

**இருதரப்பிலும்** : இல்லை

(S/d.A.Seethalakshmi)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி. (மு.கூ.பொ)